## இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம் - 2016

---

இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம் மற்றும் அதன் துணைக்கம்பனியான வரையறுக்கப்பட்ட லங்கா சீமெந்து கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணைந்த நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இணைந்த அகல் விரிவான வருமானங்கள் கூற்று, இணைந்த இணைந்த உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2017 அக்டோபர் 11 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவதம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடத்தப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துதல் எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக் கூற்றில், அகல் விரிவான வருமானங்கள் கூற்றில் மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுகின்றதா என்பதனை நிச்சயிக்க முடியாதுள்ளளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம் - தொகுதி

இவ்வறிக்கையில் 2.2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

**மறுப்பு அபிப்பிராயம் - கூட்டுத்தாபனம்**

இவ்வறிக்கையில் 2.2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

## 2.2 தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 தொகுதியின் இடையறா நீடித்தல்

கூட்டுத்தாபனத்தின் மூலதனம் ரூபா 967 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் திரண்ட நட்டம் ரூபா 676 மில்லியன்களாகும். கூட்டுத்தாபனத்தின் நீடிப்புக்கு தாக்கம் ஏற்பட்டிருக்காவிடினும், வரையறுக்கப்பட்ட லங்கா சீமெந்து கம்பனி தொடர்ச்சியான நட்டம் அடைந்துள்ள காரணத்தினால் இணைந்த உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் பிரகாரம் ரூபா 3,045 மில்லியன் இற்கான திரண்ட நட்டம் ஒன்றினை பெற்றிருந்ததுடன் மூலதனம் ரூபா 2,702 மில்லியன் ஆக இருந்தது. அதன் பிரகாரம் பங்கு மூலதனத்தின் 112.7 சதவீதம் அரிப்பு அடைந்திருந்ததென அவதானிக்கப்பட்டதுடன் அதன் காரணமாக திறைசேரியின் உதவியின்றி வரையறுக்கப்பட்ட லங்கா சீமெந்துக் கம்பனியை இடையறாமல் நடத்துதல் நிச்சயமற்றதென அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 கூட்டுதாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

**இலங்கை கணக்கீட்டு நியமம் 37**

நியமத்தின் 86 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் எதிர்பாராப் பொறுப்புக்கள் தொடர்பாக போதியளவான தகவல்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்த வேண்டுமெனினும், கூட்டுத்தாபனத்தினால் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிமன்றத்தில் விசாரணை நடைபெறும் 15 வழக்குகள் தொடர்பாக நியமத்தின் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் சீமெந்து விற்பனைப் பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யும் போது கூட்டுத்தொகை ரூபா 600,360 இற்கான தேசத்தை கட்டியெழுப்பும் வரியும் சேர்க்கப்பட்ட மொத்த விற்பனை பெறுமதியினை பதிவு செய்தமையினால் ஆண்டிற்கான மொத்த நட்டம் அப்பெறுமதியினால் குறைந்திருந்தது.

(ஆ) சீமெந்து கூட்டுத்தாபத்திற்கு சொந்தமான புத்தளப் பகுதியில் அமைந்துள்ள காணி ஒன்று ஹொல்ஸிம் லங்கா கம்பனிக்கு வாடகைக்கு கொடுத்திருந்ததுடன் வாடகை உடன்படிக்கைக் காலம் குறிப்பிட்ட வருடத்தின் மே முதல் அடுத்த வருடம் ஜூன் மாதம் வரையாகும். அதன் பிரகாரம் 2015/2016 ஆண்டுகளுக்காக கிடைத்திருந்த ரூபா 121,000 இற்கான வாடகை வருமான 2015 ஆண்டிற்கான வருமானம் ஒன்றென பண அடிப்படையில் கணக்கீடு செய்திருந்தமையால் 2016 ஆண்டிற்காக வாடகை வருமானம் ரூபா 50,416 தொகை குறைவாக பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு ஜூன் முதல் திசெம்பர் வரையான ரூபா 70,584 இற்கான பெற வேண்டிய வருமானத் தொகையொன்றினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) புத்தளம் அருவக்காலு காணியில் சுண்ணாம்பு கல் படிவு தொடர்பாக தொழில் நுட்ப ஆய்வு விடயங்களுக்காக நிலத்திற்கு நுழைவதற்கான கட்டணமாக தனியார் நிறுவனமொன்றில் இருந்து கிடைத்திருந்த ரூபா 321,900 இற்கான பெறுமதியில் ரூபா 31,900 பெறுமதிக்கூட்டிய வரி ஆக இருந்ததுடன் அந்தப் பெறுமதி கூட்டிய வரிப் பெறுவனவுகளையும் கிடைத்தவைகளையும் பலவின வருமானம் என கணக்கீடு செய்திருந்தது.

(ஈ) 2012 ஆண்டின் போது செலுத்தியிருந்த பொருளாதார சேவை கட்டணத் தொகையில் முன் கொண்டு செல்ல முடியாத ரூபா 1,065,027 இற்கான தொகை தடுத்து வைக்கப்பட்ட இலாபக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டுமெனினும், கூட்டுத்தாபனத்தினால் அதனை மீளாய்வாண்டிற்கான அகல விரிவான வருமான கூற்றிற்கு வரவு வைத்திருந்தமையினால் ஆண்டிற்கான மிகை அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2010 ஆண்டின் போது கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான எண்ணெய் தாங்கிகள் இலங்கை பெற்றோலிய மொத்த களஞ்சிய முடிவிட கம்பனிக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2010 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய மொத்த வாடகைத் தொகை ரூபா 84.6 மில்லியன் ஆக இருந்தது. அப் பெறவேண்டிய வருமானத்தை கணக்கீடு செய்திருக்காதுடன், அவ் வருமானம் 2016 ஆண்டு இறுதி வரையும் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காங்கேசன்துறையில் அமைந்துள்ள தொடர் எண்ணெய் தாங்கிகள் மற்றும் காணியின் உரிமையை எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 1989 ஆண்டின் பின்னர் நிதி நிலைமைக் கூற்றில் இந்த சொத்துக்கள் உற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) புத்தளம் மாவட்டத்தில் பாலாவியில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 221 ஏக்கர் காணியில் 152 ஏக்கர்களை மாத்திரம் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருந்த போதிலும், மீதி 69 ஏக்கர்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

### 2.2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

நிறுவனத்தினால் பேணப்பட்டுவரும் வங்கி நடைமுறைக் கணக்கொன்றிற்காக கணனிகள் மூலம் பேணப்படும் காசேட்டின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,654,122 தொகை மீதியொன்று காணப்பட்ட போதிலும் கையினால் எழுதப்பட்ட காசோட்டின் பிரகாரம் அம் மீதி ரூபா 1,106,032 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 1,548,090 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. 2008 ஆண்டு முதல் காணப்படும் அவ் வித்தியாசத்தை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் கணனி மயப்படுத்தப்பட்ட காசேட்டின் மீதியை அடிப்படையாக வைத்து நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 2.2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயங்களுக்கு எதிராக காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் அக்கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான செய்மையாய்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| வங்கிக் கடன் | 56,293,352 | கடன் கோவைகள் மற்றும் அட்டவணைகள் |
| பேற வேண்டிய வைப்புக்கள் | 859,437 | மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள் |

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் ரூபா 89,212,053 தொகையாக காணப்பட்டதுடன், அம்மீதியில் 1 வருடம் முதல் 3 வருடங்கள் வரையான ரூபா 11,010,343 தொகை மற்றும் 3 வருடங்கள் மிகைத்துள்ள ரூபா 57,988,878 இற்கான மீதியும் காணப்பட்டது. இந்த நிலுவைக் கடன் மீதியினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வியாபார மீதி ரூபா 46,502,068 தொகையாக இருந்ததுடன் அம்மீதியில் 1 வருடம் முதல் 3 வருடங்கள் வரையான ரூபா 13,180,262 தொகை மற்றும் 3 வருடங்களை மிகைத்த ரூபா 30,086,483 இற்கான மீதிகளும் காணப்பட்டன. அம் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) கூட்டுத்தாபத்தினால் 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது 13 சந்தர்ப்பங்களில் 02 மாதங்களில் செலுத்தும் அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணியை பிணையாக வைத்து குறுகிய கால கடன் ஒன்று அரச வங்கி ஒன்றிலிருந்து பெறப்பட்டிருந்தது. இந்த கடன் தொகை 2015 செப்டம்பர் 15 திகதி அளவில் செலுத்தி முடிவாக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 56,293,352 செலுத்த வேண்டியிருந்து.

(ஈ) கூட்டுத்தானம் பெற்றிருந்த வங்கிக் கடன் தொடர்பாக தவணைப் பணம் மற்றும் வட்டி உரிய முறையில் செலுத்தாமையால் வட்டித் தொகைக்காகவும் வட்டி செலுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு நேரிட்டிருந்தது. அதன் பிரகாரம் கடந்த ஆண்டுகளின் பெற்றிருந்த வங்கிக் கடன் அதற்காக வட்டியின் கூட்டுத்தொகை ரூபா 42,000,000 தொகை பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் குறுகியகால கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டதுடன் 2016 திசெம்பர் ஒன்றினைந்த 31 திகதியில் உள்ளவாறு அந்தக் கடன் கணக்கில் தீர்க்கப்படாத மீதி ரூபா 17,500,000 தொகையாக இருந்தது.

(உ) அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் பிரகாரம், சர்வதேச கம்பனி ஒன்றிற்கு செலுத்த வேண்டிய கடன் தொகை ஒன்றினை தீர்ப்பதற்காக அரச வங்கி ஒன்றில் இருந்து 2012 ஆண்டின் போது ரூபா 40,000,000 இற்கான கடன் தொகையொன்று பெறப்பட்டிருந்தது. 2013 ஆண்டு முதல் 5 வருடங்களுக்குள் 5 சமமான தவணைப் பணமாக அக் கடனை செலுத்தி முடிக்க வேண்டியிருந்த போதிலும் உரிய முறையில் தவணை பணம் செலுத்தப்படாமையால் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்த மொத்தக் கடன் தொகையில் செலுத்த வேண்டிய மொத்த கடனின் பெறுமதி ரூபா 24,000,000 தொகை ஆக இருந்தது.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| நிதிப் பிரமாணம் 396 | 02 வங்கி நடைமுறை கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 1,116,485 தொகை பெறுமதி உடைய வழங்கியிருந்த போதிலும் கொடுப்பனவுக்காக சமர்பிக்கப்படாத 09 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் காசோலைகளை இரத்து செய்துள்ளன. |
| (ஆ) 2003 ஜூன் 02 திகதிய பீஈடி/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பிரிவு | செயலாற்றுகை அறிக்கை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பணிப்பாளர் சபையினால் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் காலாண்டு முடிவடைவதற்கு 30 நாட்களுக்கு முன்னர் அவ் அறிக்கை பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு மற்றும் திறைசேரிக்கு சமர்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2015 ஜூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | பல்வேறு காரணங்களுக்காக வழங்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 1,388,569 இற்கான முற்பணத் தொகையினை இனங்கண்டு தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்து நிதிக்கூற்றுக்களில் முற்பணம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) 2016 மார்ச் 31 திகதிய 5/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காங்கேசன்துறையிலுள்ள தொடர் எண்ணைத் தாங்கிகளின் பெறுமதி ரூபா 2,624,338 இற்கான காணி, கட்டிடங்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்காக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வண்டின் நிதி விளைவுகள் ரூபா 31,700,843 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் ரூபா 2,583,617 இற்கான மிகையொன்று காணப்படாமையினால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 29,117,226 இற்கான வளர்ச்சி ஒன்று காணப்பட்டது. மீளாய்வாண்டின் மொத்த நட்டம் ரூபா 7,906,665 இனால் அதாவது 77.4 சதவீதத்தினால் குறைந்திருத்தல் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 31,498,348 இனால், அதாவது 52.46 சதவீதத்தினால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய வளர்ச்சிக்கு முக்கிய காரணங்கள் உள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு ஆண்டுகளில் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை இடையறாமல் தேறிய நட்டமொன்றினை பெற்று மீண்டும் 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது முறையே ரூபா 2,583,617 தொகை மற்றும் ரூபா 31,700,843 இற்கான தேறிய இலாப நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம், அரசுக்கு செலுத்தய வரி மற்றும் நடைமுறை அல்லாத சொத்துகளுக்காக பெறுமானத் தேய்வு கழித்தல்களை மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு 2012 ஆண்டின் போது ரூபா 26,165,135 இற்கான நேர் பெறுமதியாக இருந்ததுடன் 2013 ஆண்டின் போது ரூபா 338,370,664 இற்கான மறை பெறுமதியினை பெற்றிருந்தது. 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது பங்களிப்பு நேர் பெறுமதியில் காணப்பட்டதுடன் 2016 இல் ரூபா 70,978,162 இற்கான நேர் பெறுமதியில் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

1959 ஜனவரி 2 ஆம் திகதிய 11634 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் சீமெந்து உற்பத்தி இறக்குமதி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல், சீமெந்தினால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களைச் சந்தைப்படுத்தல் அல்லது சீமெந்து கொங்கிரீட் உட்பட தொலைபேசி மற்றும் மின்சார கம்பித் தூண்கள், தொலைபேசி குடில்கள் நீர் கொண்டு செல்லும் உபகரணங்கள், ஹியுப் குழாய்கள் மற்றும் டயில்கள் உற்பத்தி செய்தல், மின் சக்தி வலுச் சக்தி மொத்தமாக வழங்குதல் கூட்டுத்தாபனத்தின் முக்கிய குறிக்கோள்களாக இருந்தன.

மேற்கூறிய குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீமெந்து உற்பத்தி செய்து சந்தை படுத்துதல் மற்றும் சீமெந்துடன் சம்பந்தப்பட்ட உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்தல் கூட்டுத்தாபனத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்த போதிலும் கடந்த யுத்த சூழ்நிலையில் காங்கேசன்துறை சீமெந்து உற்பத்தி நிறுத்தப்பட்ட பின்னர் தற்போது சீமெந்து பைகள் இறக்குமதி செய்து சந்தைப்படுத்தல் மற்றும் கொங்கிரீட் உற்பத்தி பொருட்களைச் சந்தைப்படுத்தல் முதல் நிறுவனத்தின் அடிப்படைக் கருமம் வரையறையாகியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கூட்டிணைப்புத் திட்டம் மற்றும் செயல் நடவடிக்கை திட்டத்துடன் செயலாற்றுகை அறிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது உள்ளவாறான செயற்பாடுகளை ஒப்பீடு செய்யக்கூடிய வகையில் அவ் அறிக்கை தயாரித்திருக்கவில்லை.

(இ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 107,858,978 தொகை பெறுமதியாக சீமெந்தியினை சந்தைப்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் நிறுவனம் நிதிக் கட்டுப்பாடுகளுக்கு முகங்கொடுத்தமையினால் செயலாற்றுகை அறிக்கைளின் பிரகாரம் ரூபா 63,030,000 தொகை பெறுமதியான சீமெந்து மாத்திரமே சந்தைப்படுத்தியிருந்தது. அதன் பிரகாரம் நெருங்கிய செயலாற்றுகை எதிர்பார்த்த இலக்கில் 41.56 சதவீதம் ஆகும்.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு கொங்கிரீட் தூண்கள் மற்றும் சீமெந்து அச்சுக் கற்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்ததன் மூலம் ரூபா 2,408,000 இற்கான வருமானமொன்றினை உழைத்திருந்த போதிலும் செயல் நடவடிக்கை திட்டத்தில் தொடர்புடைய இலக்குகள் குறிப்பிட்டிருக்கவில்லை.

(உ) கூட்டுத்தாபன உறுவாக்கப்பட்ட அடிப்படைக் குறிக்கோள் சீமெந்து உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதற்காக இருந்த போதிலும் 2016 அக்தோபர் 20 ஆம் திகதிய PE/RES/VRS - 1 - 2016 ஆம் இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் மீள்கட்டமைத்த பின்னர் நாட்டின் கிளின்கர் படிவுகளின் நம்பிக்கை பொறுப்பு கூட்டுத்தாபனத்திற்கு சாட்டப்பட்டிருந்தமையால் கூட்டுத்தாபனத்தில் உள்ள மீதியான ஊழியர்கள் 14 பேரை பயன்படுத்தி வாடகையை தீர்மானித்தல், காங்கேசன்துறையின் மீதிக் கணக்குகளுக்கு வாடகைக்கு கொடுத்தல் வாடகை உடன்படிக்கைகளை இற்றைவரைப்படுத்தல் ஆகிய விடயங்களை மேற்கொண்டு அந்த வருமானத்தின் மூலம் ஊழியர் ஊதியத்தை செலுத்திய பின்னர் மீதித் தொகையை அரசுக்கு அனுப்புகள் ஆகிய விடயங்கள் கூட்டுத்தாபனத்திற்கு காட்டப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் சீமெந்து மற்றும் சீமெந்து உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்துவதற்கான மூலம் 2016 ஆண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 2,304,013 இற்கான மொத்த நட்டமொன்று பெற்றிருந்தது.

(ஆ) 1967 ஜூலை 12 ஆம் திகதிய 14756/7 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 288 ஆம் இலக்க காணி உறுதியின் மூலம் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள 89.9 பர்சஸ் கொண்ட கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாகியிருந்தது. 2008 ஆண்டின் போது இலங்கை வங்கியில் இருந்து ரூபா 172,000,000 இற்கான உச்சமட்ட கடன் எல்லையின் கீழ் கடன்பெறுவதற்காக இந்தக் காணியை பிணையாக வைத்து 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 97,793,352 இற்கான கடன் தொகையொன்று பெறப்படவேண்டியிருந்தது. அதற்காக செலுத்த வேண்டிய வட்டி ரூபா 21,767,910 தொகையாக இருந்ததுடன் வங்கிக்குச் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் மற்றும் வட்டித்தொகை ரூபா 119,561,262 தொகையாக இருந்தது. இதன் பிரகாரம் நிதித்தட்டுப்பாடுகளின் காரணமாக கூட்டுத்தாபனத்தினால் இந்த காணியை தீர்த்துக் கொள்ளல் ஆபத்து நிலைமை ஒன்று காணப்பட்டது.

(இ) கூட்டுத்தாபனத்தினால் ரூபா 1,200,000 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த காலி உனவடுன கெஸ்பேபான வில் அமைந்துள்ள 06 ஏக்கர் காணி சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களை மீள் குடியேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த காணிகளுக்கு நட்டஈடு பெற்றுக்கொள்வதற்காக காலி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

(ஈ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காங்கேசன்துறையிலுள்ள தொடர் எணணெய் தாங்கிகள் இலங்கை பெற்றோலியம் மொத்த களஞ்சிய முடிவட கம்பனிக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டதென கூறிய போதிலும் 2016 ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக இந்தக் கம்பனி அல்லது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் எழுத்துமூல உடன்படிக்கை ஒன்று கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காங்கேசன்துறையில் அமைந்துள்ள சீமெந்து தொழிற்சாலை மற்றும் கட்டிட தொகுதி அமைந்துள்ள காணி 741 ஏக்கர்களை கொண்டிருந்ததுடன். அவற்றில் 297 ஏக்கர்கள் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு காட்டப்பட்டிருந்தது. மீதியாக உள்ள 444 ஏக்கர்கள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன், உரிமை தொடர்பாக எழுத்து மூலமான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்காததுடன் இந்த தொழிற்சாலை, கட்டிடங்கள் மற்றும் காணி என்பன உயர் பாதுகாப்பு வலையத்தில் தரைப்படையின் பொறுப்பில் நீண்ட காலமாக விளைவற்று காணப்பட்டது.

(ஆ) புத்தளம் மாவட்டத்தில் பாலாவியில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 221 ஏக்கர் காணியில் 209 ஏக்கர்கள் காணி ஆக்கபூர்மான விடயம் ஒன்றிற்கும் ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கூட்டுத்தாபனத்தினால் 1981 ஆம் ஆண்டு முதல் வரையறுக்கப்பட்ட லங்கா சீமெந்து கம்பனியின் பங்குகளில் ரூபா 1,083,618,910 தொகை முதலீடு செய்திருந்த போதிலும், 2016 ஆண்டு வரை எதுவித நலன்களும் கூட்டுத்தாபனத்திற்கு கம்பனியினால் வழங்கியிருக்கவில்லை.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

2009 இன் 16 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணம் (திருத்தி) சட்டத்தின் பிரகாரம் புரழ்வு காலாண்டிற்கு ரூபா 50 மில்லியன் தொகை அல்லது அதற்கு அதற்கு மிகைக்குமிடத்து மாத்திரம் பொருளாதார சேவைக் கட்டணத்திற்கான பொறுப்பு ஒன்று ஏற்படுகின்றது. 2013 மற்றும் 2014 இரண்டு ஆண்டுகளுக்காக 2015 ஆண்டின் போது ரூபா 54,191,154 தொகை மாத்திரம் கிடைத்திருந்த போதும் அந்த வருமானத்தின் அடிப்படைய ரூபா 163,388 தொகை பொருளாதார சேவை கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. இந்தப் பணத்தை குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 27,399,370 வாடகைத் தொகையின் அடிப்படையில் ரூபா 129,211 தொகை பொருளாதார சேவைக்கட்டணம் என ஒதுக்கப்பட்டிருந்தது.

## 4.6 பதவியணியினர் நிருவாகம்

கூட்டுத்தாபனத்தின் 2016 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 76 ஆக இருந்தது. 2016 ஜூலை 31 திகதி சுயவிருப்பத்துடனான ஓய்வூதிய நட்டஈட்டுத் திட்டமொன்றின் மூலம் 36 ஊழியர்கள் ஓய்வு பெற்றிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளபடியான பதவியணி 14 பேராக வரையறுக்கப்பட்டிருந்தது. சுயவிருப்பத்துடனான நட்டஈட்டுத் திட்டம் செயற்படுத்திய பின்னர் கூட்டுத்தாபனத்திற்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி வருடம் முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட வேண்டும் எனினும் கூட்டுத்தானத்தின் 2016 ஆண்டிற்கான இணைந்த நிதிக்கூற்று மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை 2017 ஜுன் 20 திகதி கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புகளை மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 இலக்க கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் உட்படுத்தப்பட வேண்டிய நிறுவனத்தின் அமைப்பு வரைபடம், மனித வளங்கள் மற்றும் முகாமைத்துவ திறமை மற்றும் கடந்த 03 வருடங்களின் செயற்பாட்டு விளைவுகளின் மீளாய்வு ஆகிய முக்கிய விடயங்கள் அடங்கியிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறிய சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் பணிபாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம் நாளதுவரை ஆக்கப்பட்ட பிரதிகள் பாதீட்டுடன் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒவ்வொரு நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு குறைந்தளவு 15 நாட்களுக்கு முன்னர் சமர்பிக்கப்பட வேண்டும் எனினும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 5.3 செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவு பிரகாரம் திட்டமிட்ட காலப்பகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் தொடர்பான முகாமையாளர்களின் பொறுப்புக்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் தெளிவாக காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டளவில் நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள் 50 கிலோகிராம் போட்லண்ட் சீமெந்து பைகள் இறக்குமதி செய்து விநியோகித்தல் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கூட்டிணைந்ததிட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிட்டிருந்த இலக்கு பெறுமதியிடையே ரூபா 2,858,978 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது.

### 5.4 உள்ளகக் கணக்காய்வு

கூட்டுத்தாபனத்தின் 2016 ஆம் ஆண்டிற்கான முதல் அரை ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஒன்று நிறுவியிருந்த போதிலும் அதற்கு ஒரு பெண் உத்தியோகத்தர் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தார். முதலாவது அரை ஆண்டின் போது கணக்காய்வு ஐயவினாக்கள் வழங்கியிருக்கவில்லை. அத்துடன் அந்த பெண் உத்தியோகத்தரும் 2016 ஜுன் முதல் சுயவிருப்ப ஓய்வு நட்டஈட்டுத்திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றிருந்தார். இதன் காரணத்தினால் 2016 திசெம்பர் 31 திகதி அளவில் உள்ளகக்க கணக்காய்வுப் பிரிவு முற்றாக செயலிழந்து காணப்பட்டது.

## 5.5 கணக்காய்வு குழுக்கள்

2003 ஜுன் 02 திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிக் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் அவைகூட்டுநர் என தலைமை உள்ளக கணகாய்வாளருடன் குறையந்த அளவு 03 வருடங்களுக்கு ஒரு முறை கணக்காய்வு குழு வீதம் ஆண்டின் போது 04 கணக்காய்வுக் குழுக்கள் நடத்தப்பட வேண்டுமெனினும், கூட்டுத்தாபனத்தினால் 2016 ஆண்டின் போது கணக்காய்வு குழுக் கூட்டங்கள் 02 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 5.6 பெறுகைகள் திட்டம்

அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பிரிவு 4.2 இன் பிரகாரம் 2016 ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

## 5.7 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது 08 செலவுத் தலைப்புக்களில் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவுகளில் 43 சதவீதம் முதல் 971 சதவீதம் வரை முரண்கள் காணப்பட்டதுடன், பாதீட்டு மதிப்பீடுகளுக்கான அங்கீகாரம் பெறாமல் 11 மீண்டுவரும் செலவுத் தலைப்புக்களில் கூட்டுத்தொகை ரூபா 18,925,523 இற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவர் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக் கப்பட்டது.

## 5.8 வருடாந்த அறிக்கை சபையில் சமர்பித்தல்

2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுள் இறுதி கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுடன் கணக்காய்வு அறிக்கை மும்மொழிகளிலும் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட வேண்டுமெனினும் 2015 ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிப்பதற்காக 2017 ஜுலை வரை அமைச்சுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5.9 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் அடிப்படையில் சீமெந்து விற்பனை செய்வதற்காக விற்பனவு முகவர் நியமனம் வழங்கும் போது கடன் அடிப்படையில் வழங்கப்படும் பெறுமதிக்கு ஏற்ற தொகையான பிணைமுறியொன்று பெற்றுக்கொள்ளல் மற்றும் கடன் வழங்கும் போது மற்றும் கடனை சேகரிக்கும் போது முகாமையினால் முறையான மற்றும் வினைதிறனுடன் நடைமுறையொன்று கடைபிடிக்காமையால் மீளாய்வாண்டு இறுதி வரையும் கூட்டுத்தொகை ரூபா 52,506,824 தொகைக்கான கடன் மீதிகளை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) புத்தளம் மாவட்டத்தில் அருவக்காலு பகுதியில் அமைந்துள்ள 5352 ஏக்கர் சுண்ணாம்புக்கல் படிவு 1995 ஆம் ஆண்டின் போது சீமெந்து உற்பத்திக்காக சுண்ணாம்புக்கல் தோண்டுவதற்காக தனியான கம்பனி ஒன்றிற்கு 50 வருட காலப்பகுதிக்காக குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய வருடாந்த வாடகை 202,804 அமெரிக்க டொலர்களுக்கு சமமான ரூபா 26,851,358 பெறுமதியாகும். எவ்வாறாயினும் வருடாந்த வாடகையை திருத்தி அமைத்தல் தொடர்பாக பிரிவு உட்படுத்தப்பட்டிருக்காமையால் 2011 ஆகஸ்ட் 16 ஆம் திகதி கூடிய பொது முயற்சி தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழு கூட்டத்தில் இந்த வாடகை

உடன்படிக்கையை திருத்தும்படி ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்காததுடன் இந்தக் காணியினை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு எடுப்பதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | நிறுவனத்தில் பேரேடுக் கணக்குகள், ஏடுகள், ஆவணங்கள் நாளதுவரை பேணப்பட்டி ருக்காமை. |
| | | (ii) | நிறுவனத்தினால் பிரதான நாட்குறிப்பு பேணப்பட்டிருக்காமை. |
| (ஆ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) | சொத்துக்கள் பதிவேடு உரிய முறையில் பேணப்படாமை. |
| | | (ii) | கணக்கீட்டு சபை நியமனம் செய்தல் மற்றும் கணிப்பீடு செய்தல் தாமதித்தல். |
| (இ) | களஞ்சிய கட்டுப்பாடு | | சீமெந்து இருப்புக்களைப் பேணல், களஞ்சியப்படுத்தல் மற்றும் இருப்பு அறிக்கைகள் பேணல் தொடர்பாக முறையான கவனம் செலுத்தப்படாமை. |
| (ஈ) | உள்ளக கட்டுப்பாடு | (i) | உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளினை அமுல்படுத்துவதற்கு மற்றும் அவற்றை முறையாக அமுல்படுத்துவதன் மூலம் கட்டுப்பாட்டை பாமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| | | (ii) | உள்ளக கணக்காய்வு அலகொன்றினை கொண்டிராமை. |
| (உ) | கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) | நிலுவை கடன்மீதி அறவீடு செய்யப்படாமை. |
| | | (ii) | செலுத்த வேண்டிய மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |